IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 38/2021 |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Chithra | CASTE | : | |
| W/O. | Saravanan | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **14-02-2023**

## CHIEF EXAMINATION :

நான் இவ்வழக்கில் 2ம் வாதி ஆவேன். மேலும், இவ்வழக்கில் வாதி தரப்பில் 1வது சாட்சி ஆவேன். மேற்படி வழக்கில் எனது தரப்பில் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமான வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் யாவும் உண்மை என்றும், அதில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றும் உளமாற உறுதி அளிக்கிறேன். என்னால் அளிக்கக்கூடிய சாட்சியம் மற்றும் ஆவணங்கள் உண்மையானவை என உறுதியளிக்கிறேன்.

முதல் விசாரணை (வா.சா.1 ஆஜர்.) சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | குறியீட்டு எண் |
|---|---|---|---|
| 1 | - | தாவா சொத்தின் பூஸ்துதி அமைப்பை காட்டக்கூடிய தோராய மாதிரி வரைபடத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். | - |
| 2 | 08.01.1973 | பாலகுருவா ரெட்டியார் அவர்களுக்கு நாகுரெட்டியார் எழுதிகொடுத்த கிரைய ஆவணத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | வா.சா.ஆ.1 |
| 3 | 12.09.1977 | நாகுரெட்டியார் குமாரர்கள் வெள்ளைச்சாமி, கோவிந்தன் இருவரும் குருவாரெட்டியார் குமாரர் முத்து ரெட்டியாருக்கு எழுதிகொடுத்த கிரைய பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | வா.சா.ஆ.2 |
| 4 | 16.05.2003 | ராமுரெட்டியார் அவர்களின் மகன் ஜெயசீலன், ராஜு இருவரும் சேர்ந்து முத்து ரெட்டியார் குமாரரான எனது தகப்பனார் சீனிவாசன் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | வா.சா.ஆ.3 |

| | | | |
|---|---|---|---|
| 5 | 04.06.2009 | ரங்கசாமி ரெட்டியார் அவர்களின் மகன் அழகர்சாமி என்பவரால் முத்துரெட்டியார் மகனான எனது தகப்பனார் சீனிவாசன் அவர்களுக்கு எழுதி கிரைய பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | வா.சா.ஆ.4 |
| 6 | 20.07.2001 | பாலகுருவா ரெட்டியார் அவர்களின் மகன் சப்பாணி என்ற ராமச்சந்திரன் என்பவர் ராமராஜ் அவர்களின் குமாரர் சுந்தரராஜன் என்பவருக்கு எழுதிகொடுக்கப்பட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | வா.சா.ஆ.5 |
| 7 | - | தாவா சொத்து தொடர்பாக 01.01.1980 முதல் 06.01.2019ம் தேதி வரை வில்லங்கங்கள் தொடர்பாக வில்லங்க சான்றிதழின் நகல் தாக்கல் செய்கிறேன். | - |
| 8 | 12.09.2001 | ராமராஜ் அவர்களின் மகன் சுந்தராஜ் அவர்களுக்கு பாலகுருவா ரெட்டியார் மகன் சப்பாணி என்ற ராமச்சந்திரன், சேகர், மைனர் குமாரர் ராஜேஸ் என்பவருக்கு கார்டியனாக சேகர் ஆகிய இருவரும் சேர்ந்து எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்திட கேட்டுக்கொள்கிறேன். | வா.சா.ஆ.6 |

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி